ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/48 - 2021 ඔක්තෝබර් මස 15 වැනි සිකුරාදා - 2021.10.15

*2249/48 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, கண்டி வடக்கு - பாத்ததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின், உடுவாவல நீர் விநியோகத் தாங்கி அமைந்திருக்கும் நிலத்தில் மழை நீரை வெளியேற்றுவதற்காக காணித் துண்டு ஒன்றை எடுத்துக்கொள்வதற்கு தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல. DVP/*02/01*/ky/*263*.
நீர் வழங்கல் அமைச்சு,
''லக்திய மெதுர'',
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2021*, ஒற்றோபர் 07.



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 417, உடுவாவல மேற்கு கிராம அலுவலர் பிரிவில், உடுவாவல (பகுதி) கிராமத்திலமைந்த, நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 320320 இற்குரிய கடத்திரல் வரைபடத்தின் வலய இல. 03 இன் 02 ஆவது தொகுதி பத்திரிகையில் இல. 01 இல் காணித்துண்டு இல. 44 இன் பகுதியாகக் குறிப்பிடப்படும், கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 05 பேர்ச் அளவிலான காணித்துண்டின் விபரங்கள் :

**காணியின் எல்லைகள் :**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கால்வாய்; |
| கிழக்கு | : | கடத்திரல் வரைபட இல. 320320 இல் வலய இல. 02 இன் காணித்துண்டு இல. 79, 43, 41 மற்றும் 40; |
| தெற்கு | : | கடத்திரல் வரைபட இல. 320320 இல் வலய இல. 03 இன் 02 ஆவது வலயத்தின் காணித்துண்டு இல. 76 (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உடுவாவல நீர் விநியோகத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்ட காணி); |
| மேற்கு | : | கடத்திரல் வரைபட இல. 320320 இல் வலய இல. 02 இன் காணித்துண்டு இல. 44 இன் எஞ்சிய பகுதி மற்றும் இந்தக் காணியின் எஞ்சிய பகுதி. |

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

01. திரு. சஞ்சீவ அமரநாத் மனம்பேரி,
இல. 19/1,
உடுவாவல,
கட்டுகஸ்தொட்ட.

10 - 503

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தில், 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, கண்டி வடக்கு - பாத்ததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின், உடுவாவல நீர் விநியோகத் தாங்கியின் தடுப்புச் சுவரை நிர்மாணிப்பதற்கு காணித் துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல. DVP/02/01/ky/262.
நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, ஒற்றோபர் 07.

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 417, உடுவாவல மேற்கு கிராம அலுவலர் பிரிவில், உடுவாவல (பகுதி) கிராமத்திலமைந்த, நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 320320 இற்குரிய கடத்திரல் வரைபடத்தின் வலய இல. 03 இன் 02 ஆவது தொகுதி பத்திரிகையில் இல. 01 இல் காணித்துண்டு இல. 79 இன் பகுதியாகக் குறிப்பிடப்படும், கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 1.4 பேர்ச் அளவிலான காணித்துண்டின் விபரங்கள் :

**காணியின் எல்லைகள் :**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | கடத்திரல் வரைபட இல. 320320 இல் வலய இல. 02 காணித்துண்டு இல. 79 இன் எஞ்சிய பகுதி; |
| கிழக்கு | : | கடத்திரல் வரைபட இல. 320320 இல் வலய இல. 02 இன் காணித்துண்டு இல. 79 இன் எஞ்சிய பகுதி; |
| தெற்கு | : | கடத்திரல் வரைபட இல. 320320 இல் வலய இல. 03 இன் 02 ஆவது வலயத்தின் காணித்துண்டு இல. 76 (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உடுவாவல நீர் விநியோகத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்ட காணி); |
| மேற்கு | : | கடத்திரல் வரைபட இல. 320320 இல் வலய இல. 02 இன் காணித்துண்டு இல. 44. |

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

01. திருமதி ஐ. ஜீ. லீலாவதி,
இல. 23/3,
கலஹிடியாவவத்த,
உடுவாவல,
கட்டுகஸ்தொட்ட.

10 - 504

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, புபுரெஸ்ஸ அடபாகே நீர் வழங்கல் திட்டத்தின், அடபாகே நீர் சுத்திகரிக்கும் மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கு காணித் துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார**,
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல. DVP/02/01/ky/261.
நீர் வழங்கல் அமைச்சு,
''லக்திய மெதுர'',
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, ஒற்றோபர் 07.

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், உடபலாத பிரதேச செயலாளர் பிரிவில், இல. 1169, அமுஹேன கிராம அலுவலர் பிரிவில், அடபாகே (பல்லேகம) கிராமத்திலமைந்த, ''யக்தென்னே கும்புர மற்றும் பிஹில்லதென்னே கும்புர'' எனும் காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 01 ஏக்கர் 18.3 பேர்ச் அளவிலான காணித்துண்டுகள் இரண்டின் விபரங்கள் :

| | | |
|---|---|---|
| **காணித்துண்டு இல.** | : | **01** |
| காணியின் பெயர் | : | யக்தென்னே கும்புர மற்றும் பிஹில்லதென்னே கும்புர; |
| விஸ்தீரணம் | : | 02 ரூட் 9.3 பேர்ச். |

**காணியின் எல்லைகள் :**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | அடபாகே ஓய; |
| கிழக்கு | : | டபிள்யூ. ஏ. டபிள்யூ. ஸ்டென்லி விஜேசிங்க உரிமை கோரும் காணி; |
| தெற்கு | : | கம்பளை துனுகேஉல்ல பாதையிலிருந்து சிறிய மின் உற்பத்தி நிலையம் வரையிலான வீதி; |
| மேற்கு | : | சம்பத் விஜேசிங்க உரிமை கோரும் காணி. |

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

01. திரு. எல். எச். ஜீ. பிரியந்த விஜேவர்தன,
இல. 78,
சியம்பலாகொட,
லீமகஹகொட்டுவ.

**காணித்துண்டு இல.** : ***02***
காணியின் பெயர் : *யக்தென்னே கும்புர மற்றும் பிஹில்லதென்னே கும்புர;*
விஸ்தீரணம் : *02 ரூட் 9 பேர்ச்.*

**காணியின் எல்லைகள் :**

வடக்கு : அடபாகே ஓய;
கிழக்கு : கால்வாய்;
தெற்கு : கம்பளை துனுகேஉல்ல பாதையிலிருந்து சிறிய மின் உற்பத்தி நிலையம் வரையிலான வீதி;
மேற்கு : எல். எச். ஜீ. பிரியந்த விஜேவர்தன உரிமை கோரும் காணி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

01. திரு. டபிள்யூ. ஏ. டபிள்யூ. ஸ்டென்லி விஜேசிங்க,
பாடசாலை அருகில்,
உடகம,
அடபாகே.

*10 - 505*